முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OS | 13 | of | 2018 |

2025–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05–ம் நாளான இன்று

வாதி/பிரதிாவதி தரப்பில் -வது சாட்சியின் வாக்குமூலமானது 1873-ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.V.Narasimhan, Bench Clerk Grade–I, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தாசரி அரிகிருஷ்ணவேணி | தந்தை பெயர் | |
| | | கணவர் பெயர் | விஜயகுமார் |
| கிராமம் | | தாலுகா | |
| ஜாதி | | சமயம் | |
| தொழில் | | வயது | |

---

நாள் 05.02.2025 – பி.வா.சா.1

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. எனது தரப்பில் முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு அது பதிவு செய்துகொள்ளப்பட்டுள்ளது.

**குறுக்கு விசரணை**

இந்த வழக்கின் வாதி நீலாகுமாரியை எனக்கு பல வருடங்களாக எனக்கும் என் கணவருக்கும் நன்றாக தெரியும். வாதியின் கணவரையும் எனக்கு தெரியும். என் கணவருக்கும் வாதியின் கணவர்

விஜயகுமாருக்கும் இடையே ஏற்கனவே ஒன்றுக்கு மேற்பட்டதடவை கொடுக்கல் வாங்கல் இருந்தது. வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் வழக்கின் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதிகள் என்றால் சரி. பவர் எனக்கு கொடுத்துள்ளார்கள். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் என்னுடைய மகள்கள். அவர்கள் கொடுத்த பவர் பத்திரம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரி. வா.சா.ஆ.1 பவர் பத்திரத்தின் அடிப்படையில் தான் வா.சா.ஆ.2 கிரய அக்ரிமென்டை போட்டுக்கொண்டோம் என்றால் சரி. வா.சா.ஆ-2 13.04.2015ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரி. அதில் கிரய தொகை 65 லட்சம் என்றால் சரி. வா.சா.ஆ-2 கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட போது வாதி 5 லட்சம் ரூபாய் எனக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. மீதி 60 லட்சம் ரூபாயை 11 மாதங்களுக்குள் எனக்கு கொடுக்க வேண்டுமென வா.சா.ஆ-2ல் குறிப்பிடப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் கிரய பத்திரம் பதிவு செய்து தர வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. என்னுடைய சொந்த ஊர் விஜயவாடா. கிரய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட போது சென்னையில் இருந்தேன். என் கணவருக்கு அமெரிக்காவிலும் சிகிச்சை எடுத்தோம். அங்கு குறைந்த காலம் சிசிச்சை எடுத்தோம். இந்தியாவில் நீண்ட காலம் சிகிச்சை எடுத்தோம். வாதி 05.01.2016 அன்று விஜயவாடா வந்து எங்களை பார்த்து தாங்கள் கிரய பாக்கி தொகையை கொடுத்துவிட்டு கிரயம் செய்துகொள்ள தயாராக இருப்பதாக சொன்னார்கள் என்றால் சரியல்ல. போனிலும் கேட்கவில்லை. நாங்கள் கேட்டோம். வாதி கேட்டதற்கு நாங்கள் வெளி நாட்டில் இருப்பதாக சொன்னோம் என்றால் சரியல்ல. 28.03.2017 மற்றும் ஏப்ரல்

மாதம் 2016ம் ஆண்டு 2ம் வாரத்தில் போனில் பல முறை கேட்டு நாங்கள் என் கணவர் அமெரிக்காவில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார், அவர் வந்த பிறகு தான் நாங்கள் சொல்ல முடியும் என்று சொன்னோம் என்றால் சரியல்ல. வாதி 27.06.2017 அன்று ஒரு பதிவு தபால் அனுப்பி அதை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4ல் உள்ளது என்னுடைய கையெழுத்து தான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–4ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி என்னுடைய முகவரி தான். வா.சா.ஆ–4ல் என்னுடைய முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 எனக்கு வந்த தபாலுக்கு நான் அளித்த ஒப்புகை அட்டை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் வாதி பாக்கி 60 லட்சம் ரூபாயை கொடுத்து கிரயம் செய்து கொள்ள தயாராக இருப்பதாகவும் நாங்கள் தான் தாமதித்து வருகிறோம் என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் வேண்டுமென்றே தாமதம் செய்ததால் வாதி வழக்கு சொத்து சம்மந்தமாக 14.11.2017ல் வில்லங்கம் போட்டு பார்த்ததில் நாங்கள் செய்த மோசடி தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. வாதியின் மீது 13.04.2015 முதல் 14.11.2017 வரை சட்டப்படி நான் நடிவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் வழக்கு சொத்து சம்மந்தமாக எழுதிகொடுத்த வா.சா.ஆ–1 பவர் பத்திரத்தை 01.09.2015ல் அவர்கள் வாதிக்கு தகவல் தெரிவிக்காமல் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் ரத்து செய்யவில்லை. 01.09.2015 அன்று என் மகள்கள் என் பெயரில் எழுதிவைத்த தான செட்டில்மென்ட் பத்திரம் வா.சா.ஆ.6 என்றால் சரிதான். வாதிக்கு தெரியப்படுத்தாமல்

வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 11 மாதம் காலக்கெடு முடிவதற்கு முன்பாகவே 01.09.2015 அன்றே 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் எழுதிகொடுத்த பவர் பத்திரத்தை 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் என்னுடன் வஞ்சகூட்டு வைத்து ரத்து செய்து அன்றைய தேதியிலேயே 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக வா.சா.ஆ–6 தான செட்டில்மென்ட் பத்திரத்தை வாதியை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எழுதி பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய மகள்கள் என் பெயரில் தான செட்டில்மென்ட் எழுதிவைத்தார்கள் என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ–1ஐ ரத்து செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துவிட்டு தற்போது வா.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழில் வா.சா.ஆ–1 ஏற்கனவே 01.09.2015 அன்று ரத்து செய்யப்பட்டதாக பதிவாகியுள்ளதால் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பக்கத்தில் 18.06.2016 அன்று வாதிக்கு ஒரு கடிதம் அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றும் அந்த கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் நான் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றும் நான் 5 லட்சம் ரூபாயை திரும்ப வாதி வங்கி கணக்கில் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் 5 லட்சம் ரூபாயை திரும்ப வாதி வங்கி கணக்கில் செலுத்தியிருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருப்பேன் என்றும் செலுத்தாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கடிதம் அனுப்பிய பிறகு நான் பிந்தைய சிந்தனை கொண்டு 5 லட்சம் ரூபாயை வாதி வாங்கி கணக்கில் செலுத்தியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 18.06.2016 அன்று அனுப்பியதாக சொல்லும் கடிதத்தில் வாதியிடம் பவர் பத்திரம் கேன்சல் செய்யப்பட்டு என் பெயருக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது பற்றி சொல்லியுள்ளேனா என்றால் என் கணவரை தான் கேட்க வேண்டும். 13.04.2015 அன்று கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பிறகு காலக்கெடு முடிவதற்குள் 5 மாதத்திற்குள் எதற்காக பவர் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு என் பெயரில் தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. என் கணவரை கேட்டு சொல்கிறேன். நான் எனக்காக மட்டும் தான் சாட்சி சொல்கிறேன்.
(வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)